மாண்புமிகு மேலவைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, 1974 ஆம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(5) தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/74).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/74) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்று நான் முன்மொழிகிறேன்.

1959-ம் ஆண்டு தமிழ் நாடு இந்து சமய அறக்கட்டளைச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 22/1959) 116 ஆவது பிரிவு, இச்சட்டத்தின் செயல் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு விதிகளை இயற்றும் அதிகாரத்தை அரசுக்கு அளிக்கிறது. மேற்சொன்ன பிரிவின் (2) உட்பிரிவு, அரசு விதிகள் இயற்ற வேண்டிய குறிப்பிட்ட வகைகளைச் சேர்ந்த நேர்வுகளைக் குறிப்பிடுகிறது. சமய நிறுவனங்களில் காணிக்கைகளாகச் செலுத்தப்படும் முடி, ஏனைய பொருட்கள் உட்பட இயங்கும் சொத்துக்கள் (அரசு வணிகக் கழகம் உட்பட) எந்த நபர்களுக்கு எந்த முறையில், எந்த நிபந்தனைகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு சமய நிறுவனங்களால் விற்பனை செய்யப்படலாம் அல்லது வேறு வகையில் ஒரு வகை செய்யப்படலாம் என்பது குறித்து விதிகளில் வகை செய்வது அவசியம் எனக் கருதப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இம்மன்றத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

@ 143–144 ஆம் பக்கத்தில் இணைப்பு VI ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/74) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, நெடுந்தலைப்பு, முகப்புரை ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/74) நிறைவேற்றப்பட வேண்டும்".

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 15/74) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(6) தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு, இந்து-சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு (சட்டப்பேரவை சட்ட முன் வடிவு எண் 21/74).

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ் நாடு, 1974 ஆம் ஆண்டு இந்து-சமய அறக்கட்டளைகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவு@ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/74) பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"
என்று நான் முன்மொழிகிறேன்.

@ 144 ஆம் பக்கத்தில் இணைப்பு VII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS